ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1789/9 - 2012 දෙසැම්බර් මස 17 වැනි සඳුදා - 2012.12.17
*1789/9 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அப்பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை 2013.01.01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் இவ் அட்டவணையில் தரப்பட்டவாறு இத்தால் கட்டளையை ஆக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, திசெம்பர் 17.*

**அட்டவணை**

அட்டவணையின் 01, 02,03,04 மற்றும் 05 ஆம் விடயங்களை நீக்குவதன் மூலம் பின்வரும் விடயங்கள் அதற்காக பதிலிடப்படுகின்றது.

| | |
|---|---|
| "1. ஏதேனும் சத்தியக் கடதாசியொன்று | ரூபா 250.00 |
| 2. ஏதேனும் காப்புறுதி பூட்கையொன்று ஒவ்வொரு 1000 ரூபா அல்லது பூட்கையின் தவணைக் கட்டணத்தின் மொத்த தொகையின் ஒவ்வொரு பகுதிக்கும். | ரூபா 1.00 |
| 3. பகிரங்க நொத்தாரிசு ஒருவராக செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரமொன்று | ரூபா 2000.00 |
| 4. (அ) மதுபான விற்பனைக்கான வியாபாரம் அல்லது வர்த்தகம் தவிர்ந்த வேறு ஏதேனும் வியாபாரத்தை, வர்த்தகத்தை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலை (வழங்கப்பட்ட உரிமமொன்றில்) குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு கொண்டு நடாத்துவதற்கான உரிமப் பத்திரம். | ரூபா 2,000.00 அல்லது உரிமக் கட்டணத்தின் 10% இரண்டில் எது குறைவானதோ அத் தொகை |
| (ஆ) மதுபான விற்பனைக்கான வியாபாரம் அல்லது வர்த்தகமொன்றினை (வழங்கப்பட்ட உரிமமொன்றில்) குறிப்பிட்ட காலத்திற்குக் கொண்டு நடாத்துவதற்கான ஏதேனும் உரிமப்பத்திரம். | ரூபா 20,000.00 |
| 5. ஒவ்வொரு 1,000 ரூபாவிற்கும் அத்தொகைய தொகையின் ஏதேனும் அல்லது பகுதிக்கு ஏதேனும் அல்லது பகுதிக்கு ஏதேனும் காலப்பகுதியின் போது ஏதேனும் கடன் அட்டை (கிரடிட் காட்) பயன்படுத்தி செய்யப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏதேனும் நிதி அல்லது சேவைகள் கட்டளை வருமதி உள்ளடங்காத ஏதேனும் பணத்தொகைக் கொடுப்பனவுக்கான கோருதல், கேள்வி அல்லது வேண்டுகோள். | ரூபா 15.00" |

1- 383

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.